31-06-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இளைஞர்களிடையே காணப்படும் வெளிநாட்டு மோகம்**

இலங்கை இளைஞர்களிடையே வெளிநாடு செல்லுதல், குறிப்பாக வேலைக்காகவும், பாதுகாப்பின் நிமித்தமாகவும் செல்லுவது என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. அதிலும் தமிழ் இளைஞர்களைப் பொருத்தவரை வெளிநாட்டு மோகம் அதிகமாக உள்ளது. இளைஞர்களின் இந்தப் போக்குக்கு இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தம் எவ்வளவு தூரம் காரணமாக உள்ளது என்ற கேள்வியுடன் கலந்துரையாடல் ஆரம்பித்தது.

யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பின்னரும் தமிழ் இளைஞர்களுக்கான வெற்றிடமும் ஒன்று இருந்தது என்ற போதிலும் அதற்கு முன்னமே இளைஞர்கள் படிப்பின் நிமித்தம் வெளிநாடு செல்லுதலும் நன்கு படித்த ஒரு தரப்பு இளைஞர்கள் வேலை நிமித்தம் வெளிநாடு செல்லுதலும் இருந்து கொண்டுதானிருந்தனர். இது விதிமுறைகளுக்குட்பட்டு நடந்துவந்தது.

போர்க்காலத்தில் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக சென்றோர் காலப்போக்கில் பொருளாதார நிலையில் இலங்கையில் உள்ள அவர்தரப்பைச் சேர்ந்தவர்களைவிட முன்னேறியமை இன்னும் பலருக்கு வெளிநாடு என்ற ஒரு மிகப் பெரிய கனவை ஏற்படுத்தியதோடு சமூகத்தில் ஒரு மிகப்பெரிய விம்பத்தையும் ஏற்படுத்தியது.

வெளிநாடுகள் செல்வதன் மூலமாக பணமீட்டுதல் இலகுவானது என்ற ஒரு எண்ணமும் மக்கள் மத்தியில் ஆழவேறூன்றத் தொடங்கியமை மென்மேலும் இளைஞர்களிடையே இந்த மோகத்தைத் தூண்டிவிட்டது.

தவிரவும் போர்க்காலத்திலும் சரி அதன் பின்னான சமாதான காலத்திலும் சரி இளைஞர்களது வெளியேற்றத்திற்குக் காரணமாக அமைந்த ஒன்று பாதுகாப்புப் பிரச்சினையாகும். அத்துடன் சினிமாக்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வெளிநாட்டுக் கலாசார விம்பம் என்பதும் அங்குள்ள வசதியான வாழ்வு என்பதும் ஒரு முக்கிய உந்து சக்த்தியாக இருந்துதான் வந்துள்ளது.

இளைஞர்களது கனவு வெறுமனே மேற்குறிப்பிட்ட விடயங்களால் உருவானவை அல்ல. ஏற்கனவே வெளிநாடு சென்ற அவர்களது உறவினர்களது அழைப்பு அதற்கு வழிவகுத்து. இப்படியான உறவினர்களது ஆசைவார்த்தைகளால் தமது கல்வியை விட்டு எத்தனையோ இளைஞர் எங்கள் மத்தியில் இருப்பது கண்கூடு.

சட்டவிரோத வெளிநாட்டு குடிபெயர்வு, சட்டங்களுக்குட்பட்ட குடி பெயர்வின் போதான மோசடிகள், அவை தொடர்பான பாதுகாப்புச் சட்டங்கள், அவற்றுக்கான அமைப்புக்கள் என்பன பற்றிய தெளிவுகள் பலருக்கு இல்லை. அப்படியே தெரிந்து இருந்தாலும் அதைப்பற்றி அக்கறைப்படுவதாய் இல்லை.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு லாபம் ஈட்டும் அரச அரச சார்பற்ற தொழில் நிறுவனக்கள் இதன் மூலம் பெரும் இலாபம் ஈட்டுவதோடு பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றவும் செய்கின்றன.

கல்வி வணிகத்தை நிலைநாட்டும் சர்வதேச கல்வி நிறுவனக்கள், இலங்கை உயர்கல்வி அமைப்பு முறையில் உள்ள போதாமை என்பனவும் இன்னொருதரப்பு இளைஞர்கள் வெளிநாடு செல்வதற்கு உதவியாயும் தூண்டலாயும் உள்ளன.

பலவாறான கஷ்டங்களுடன் வெளிநாடு செல்பவர்கள் மீண்டும் நாட்டிற்கு திரும்பி வர விருப்பம் காட்டாமை என்பது நாட்டுக்கு மிகவும் இழப்பான விடயமாகும்.

மிகுதி அடுத்த பக்கம்..



வ. அ. இராசரத்தினம்

*வ. அ. இராசரத்தினம் (பி. ஜூன் 5, 1925, மூதூர்)*

புகழ் பெற்ற ஈழத்து சிறுகதை, நாவல் எழுத்தாளர். சுருக்கமாக வ. அ. என அறியப்படுபவர். ஈழநாகன், கீழக்கரை தேவநேயப் பாவாணர், வியாகேச தேசிகர் என்னும் பல புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

மூதூர், திருக்கோணமலையைப் பிறப்பிடமாக கொண்ட இவரின் பெற்றோர் வஸ்தியாம்பிள்ளை, அந்தோனியா. தாமரைவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்வி கற்றார்.

துறைக்காரன் (நாவல்)
கொழுகொம்பு (நாவல்)
கிரௌஞ்சப் பறவைகள் (நாவல்)
ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (சிறுகதைத் தொகுதி)
ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது (நாவல்)
தோணி (சிறுகதைத் தொகுதி)
பூவரசம் பூ (மொழிபெயர்ப்புக் கவிதை)
மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (சரித்திரம்)
இலக்கிய நினைவுகள் (நினைவுக் கட்டுரைகள், அன்பர் வெளியீடு, திருக்கோணமலை, 1995)

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

# கடைசி முத்தங்கள்

வெகு இயல்பாக இன்றளவும்
நாம் ஒருபோதும்
பரிமாறிக் கொள்வதில்லை
வேண்டுமளவு முத்தங்களை


ஒவ்வொரு முறையும்
ஒரு தற்காலிக நிகழ்வாக
இருப்பதற்கான
சூழ்நிலைகளை
முதலில் ஏற்படுத்திக் கொள்கிறோம்

நெடிய எதிபார்பின்
தவிப்பான தருணங்களிலும் கூட
ஒளித்து வைக்க முயல்கிறோம்
நமக்கான முத்தங்களை
யாரும் அறியாமல் இருக்கும் பொருட்டு

மூச்சிறைக்கும் முதுமையில்தான்
முத்தங்களை பகிர்ந்து கொள்கிறோம்
முடிந்த வரை எந்தப்
பீடிகையும் இல்லாமல்
ஒரு குழந்தையின் துள்ளலுடன்

இப்படியாக நாம் ஒளித்து வைத்த
முத்தங்கள் எல்லாம்
பலரும் அறியும் போருட்டு
நமக்கு எப்படியோ
மீண்டும் கிடைத்து விடுகிறது
கடைசியாக காட்சிப் பொருளாய்
நாம் தேகம் கிடத்திய நிலையில்
மனமுறுகி நம்மை வழியனுப்பும்
பல நெற்றி முத்தங்களாய்

பிரேம பிரபா
(நன்றி : keetru.com)



**மாக்ஸ் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

1) மாக்சிசத்தின் தோற்றத்தையும் அதன் சமாசாரத்தையும் வெளிப்படுத்திய முதலாவது வரலாற்றுப் பிரகடனம்.

2) அன்றுவரையான முந்திய மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளிலும் அதற்கு முன்பும் நிலவிய பலவகைப்பட்ட சோஷலிசக் கருத்துக்கள் எண்ணிக்கையிலிருந்து மாறுபட்டதான விஞ்ஞான சோஷலிசத்தை தெளிவுடன் நிலைநிறுத்தியது.

3) விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படைகளை இயங்கியல் பொருள்முதல்வாத அடிப்படையில் முன்நிறுத்தியது.

4) சமூக வளர்ச்சியில் உருவாகிய பொருள் உற்பத்தியானது முதலாளித்துவ வளர்ச்சியாகி நின்றமையை இவ் அறிக்கை வெளிப்படுத்தியது.

5) முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்குமிடையிலான வர்க்க உறவு நிலையை எடுத்து விளக்கியது.

6) வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் வர்க்கப் போராட்டத்தின் நிகழ் போக்கினை துல்லியமாக எடுத்துக்காட்டியது.

7) கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாட்டை எவ்வித ஒழிவு மறைவுமின்றி பிரகடனப்படுத்தியது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின்
## மாநாடு
மற்றும்
## கலை நிகழ்ச்சிகள்

16.06.2012 - சனிக்கிழமை

காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை
தேசிய கலை இலக்கியப் பேரவையின்
மாநாடு
(பேரவை அங்கத்தவர் மாத்திரம்)

மாலை 4.15 மணிமுதல் மதியம் 4.45 மணிவரை
மக்கள் பாடல்கள்

மாலை 5.00 மணிமுதல் மதியம் 5.15 மணிவரை
"புதுவசந்தம்" மலர் வெளியீடு

மாலை 5.30 மணிமுதல் மதியம் 6.15 மணிவரை
"சங்காரம், சக்தி பிறக்குது" ஆற்றுகை

மாலை 5.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை
குறும்படங்கள்
அம்மா, இடைவெளி

17.06.2012 - ஞாயிற்றுக்கிழமை

காலை 9.30 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை
கருத்தரங்கு
தலைமை - சி.தில்லைநாதன்

மாலை 4.15 மணிமுதல் மாலை 5.15 மணிவரை
கவியரங்கம் "வாழ்வைச் சந்தித்தல்"
தலைமை : சி.சிவசேகரம்

5.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை
"சுப்பற்ற கொல்லை" நாடகம்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
cc BY NC SA